தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

ஆணை எண் 103 /ந/2022
நாள் 23.05.2023

திரு.கி. விஜயராகவன்,
கூத்தாநல்லூர்,
திருவாரூர் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
கூத்தாநல்லூர் நகராட்சி,
திருவாரூர் மாவட்டம். – எதிர் மனுதாரர்

திருவாரூர் மாவட்டம், கூத்தாநல்லூர், லெட்சுமாங்குடி, மரக்கடை, சாய்ராம் ஸ்ரீ ஆண்டாள் டிரான்ஸ்போர்ட் என்ற முகவரியில் வசிக்கும் திரு.கி. விஜயராகவன் என்பவரின் 03.04.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 05.04.2023 அன்று பெறப்பட்டு 103/ந/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

திருவாரூர் மாவட்டம், கூத்தாநல்லூர், லெட்சுமாங்குடி, மரக்கடை, சாய்ராம் ஸ்ரீ ஆண்டாள் டிரான்ஸ்போர்ட் என்ற முகவரியில் வசிக்கும் திரு.கி. விஜயராகவன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

“நான் கடந்த 4 மாதங்களாக கூத்தாநல்லூர் நகராட்சியில் JCB இயந்திரம் கொண்டு, ஆணையர் மற்றும் நகரமன்ற தலைவர் ஆகியோரின் கட்டளைக்கு இணங்க கூத்தாநல்லூர் நகராட்சி பகுதியை சுத்தம் செய்து வருகிறேன். 4 மாதங்களாக JCB இயந்திரம் கொண்டு ஓட்டிய தொகையை கடந்த 20 நாட்களாக பெறுவதற்காக கூத்தாநல்லூர் நகராட்சி ஆணையர் (திரு.குமரிமன்னன்) அவர்களிடம் முறையிட்டு வருகிறேன். ஆனால் ஆணையரோ அவர் ரிட்டையர்டு ஆவதற்கு இன்னும் சில மாதங்களே இருப்பதாலும் மேலும் அவருடைய உயர்அதிகாரிகளுக்கு கொடுக்க வேண்டும் என்றும் என்னிடம் தெரிவித்து ரூ 25,000/– கொடுத்தால் மட்டுமே உங்களுடைய தொகையை தருவேன் என்று கூறுகிறார்.

நான் அவரிடம், மிகுந்த சிரமத்தில் இருப்பதால் என்னால் தற்பொழுது அவ்வளவு பெரிய தொகை தரஇயலாது என்று எவ்வளவோ மன்றாடி கூறிவிட்டேன். அதனால் எனக்கு சேரவேண்டிய தொகையை தராமல் என்னை வேண்டுமென்றே இழுத்தடித்துக் கொண்டு இருக்கிறார். இதனால் நானும் எனது குடும்பத்தாரும் மிகுந்த மனவேதனையில் இருக்கின்றோம். மேலும் என் வாகனத்திற்கு மாதத்தவணை செலுத்த முடியாத நிலையில் உள்ளேன். இதே நிலை நீடித்தால் என் குடும்பத்தோடு தற்கொலை செய்து கொள்வதை தவிர எனக்கு வேறு வழியில்லை.

அய்யா அவர்கள் கூத்தாநல்லூர் நகராட்சியில் இருந்து தரவேண்டிய தொகையை பெற்றுத்தர ஆவன செய்வதோடு என்னிடம் லஞ்சம் கேட்ட கூத்தாநல்லூர் நகராட்சி ஆணையர் திரு.குமரிமன்னன் அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு மிக தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

(2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 03.05.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் கூத்தாநல்லூர் நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது. ஆனால் நகராட்சி ஆணையரால் விளக்க் அறிக்கை ஏதும் இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(3) மனுதாரரும் மற்றும் கூத்தாநல்லூர் நகராட்சி ஆணையரும் 10.05.2023 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 03.05.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(4) மனுதாரர் திரு.கி. விஜயராகவன் 10.05.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

"திருவாரூர் மாவட்டம் கூத்தாநல்லூர் நகராட்சிக்கு, நகராட்சிப் பகுதியை சுத்தம் செய்திட எனது JCB இயந்திரத்தை வாடகைக்கு எடுத்திருந்தனர். மேற்கண்ட இயத்திரத்திற்கான வாடகைத் தொகை ரூபாய் 1.30 இலட்சம் ஆகும். மேற்கண்ட வாடகைக்கான தொகையை கூத்தாநல்லூர் நகராட்சி ஆணையரிடம் கோரியபோது தனக்கு கையூட்டு கொடுத்தால் மட்டுமே பில் செட்டில் செய்யப்படும் என தெரிவித்துள்ளார். JCB இயந்திரத்தின் மூலம் நகராட்சியில் மேற்கண்ட பணிகள் எவ்வித தொய்வும், குறைபாடுமின்றி செய்து முடிக்கப்பட்டது. பணிகள் மேற்கொள்வதற்கு முன்பும், பணிகள் மேற்கொண்ட பின்பும் எடுக்கப்பட்ட புகைப்பட நகல்களை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்.

மேற்கண்ட பணிகள் நடைபெற்றபோது அதன் விவரங்களை முன்னாள் மற்றும் இந்நாள் ஆணையர்களுக்கு கைப்பேசி மூலம் தகவல் அனுப்பியபோது மேற்கண்ட முன்னாள் மற்றும் இந்நாள் ஆணையர்கள் எனக்கு WhatsApp மூலம் 'நன்று' (Good) என குறுச்செய்தி அனுப்பியுள்ளனர். இருந்தாலும் எனக்கு சேர வேண்டிய வாடகைத் தொகையை அளிக்கவில்லை. இந்நேர்வு தொடர்பாக நகராட்சி நிர்வாக மண்டல அலுவலரிடம் தெரிவித்தபோது, இது குறித்து Lodge Complaint to Vigilance Department என

தெரிவித்து WhatsApp–ல் குறுஞ்செய்தி அனுப்பியுள்ளார். மேற்கண்ட குறுஞ்செய்திகளின் விவரங்களையும் அவற்றின் நகல்களையும் இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்.

மேற்கண்ட நிலையில் கூத்தாநல்லூர் நகராட்சியிலிருந்து எனக்கு சேரவேண்டிய மேற்கண்ட நிலுவைத் தொகையான ரூ. 1.30 இலட்சத்தை எனக்கு விரைவில் கிடைத்திட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(5) எதிர்மனுதாரரான கூத்தாநல்லூர் நகராட்சி ஆணையாளர் 10.05.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

"கூத்தாநல்லூர் நகராட்சிப் பகுதியில் JCB இயந்திரம் கொண்டு நகராட்சிப் பகுதியை சுத்தம் செய்யும் பணியை மேற்கொள்ள மனுதாரருக்கு முந்தைய ஆணையரால் பணியாணை வழங்கப்பட்டது. இதற்கான முறையான டெண்டர் ஏதும் விடப்படாதது குறித்து தெரியவந்ததையொட்டி மனுதாரரால் செய்து முடிக்கப்பட்ட பணிகளுக்கான தொகை அவருக்கு இன்னும் வழங்கப்படவில்லை என்பதையும், மனுதாரால் செய்து முடிக்கப்பட்ட பணிகளுக்கான பதிவேடுகளை சரிபார்த்த பின்னர் மனுதாரருக்கு சேரவேண்டியத் தொகை வழங்கப்படும் என்பதையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் மனுதாரர் தெரிவித்துள்ளவாறு அவருடைய நிலுவைத் தொகையை அளித்திடும்பொருட்டு எவ்வித கையூட்டும் என்னால் கேட்கப்படவில்லை என்பதையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், கூத்தாநல்லூர் நகராட்சி ஆணையாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

2014 ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்சட்டம் மற்றும் விதிகளில் இம்முறைமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையிலும், குறிப்பாக:–

பிரிவு "7" The Ombudsman shall perform all or any of the following functions namely:-

7 (c) where the irregularity is due to willful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules அடிப்படையிலும், இந்நிகழ்வில் பின்வருமாறு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

திருவாரூர் மாவட்டம், கூத்தாநல்லூரைச் சேர்ந்த மனுதாரர் திரு.க.விஜயராகவன் என்பவர் தனது 03.04.2023 நாளிட்ட முறையீட்டு மனுவில், கூத்தாநல்லூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் JCB இயந்திரம் மூலம் கடந்த 4 மாதங்களாக சுத்தம் செய்து, அப்பணி மேற்கொண்டதற்கான தொகையினை வழங்குவதற்கு கையூட்டு வழங்கினால்தான் ஒப்பளிப்பு

செய்யப்படும் என கூத்தாநல்லூர் நகராட்சி ஆணையாளர் தெரிவித்துள்ளார் என நகராட்சி ஆணையர் மீது புகாராக தெரிவித்து, தனக்கு சேரவேண்டிய தொகையை ஒப்பளிப்பு செய்ய ஆவனச் செய்யுமாறு கோரியுள்ளார்.

திருவாரூர் மாவட்டம், கூத்தாநல்லூர் நகராட்சி பகுதியில் சுடுகாடு சுத்தம் செய்தல், குனுக்கடி கம்போஸ்ட் சுத்தம் செய்தல், முட்புதர்கள் அகற்றுதல் மற்றும் இதரப்பணிகளுக்கு தேவைப்படும் JCB இயந்திரம் வாடகைக்கு வழங்கும் பணிக்காக கூத்தாநல்லூர் நகராட்சியால் 02.02.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வெளியிடப்பட்டு, இப்பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி குறிப்பிட்ட மனுதாரரரின் நிறுவனமான சாய்ராம் ஸ்ரீஆண்டாள் டிரான்ஸ்போர்ட் மற்றும் எர்த் மூவர்ஸ் என்கிற நிறுவனத்திற்கு ஒப்பந்தம் வழங்க அவசர அவசியம் கருதி, நகர்மன்றத் தலைவரிடம் முன்அனுமதி பெற்று 16.02.2023 அன்று நகராட்சி மன்றத்தால் ஏற்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் மேற்படி நிறுவனத்திற்கு 16.02.2023 அன்று பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

மனுதாரர், கூத்தாநல்லூர் நகராட்சியின் பணி ஆணையில் தெரிவிக்கப்பட்ட பணிகளை 21.12.2022 முதல் 27.03.2023 வரை JCB இயந்திரம் மூலம் மேற்கொண்டு, ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டபடி 1 மணி நேரத்திற்கு JCB இயந்திர வாடகைத் தொகை ரூ1,150/– வீதம் மொத்தம் 94.80 மணி நேரங்கள் பணி செய்ததற்கு மொத்தம் ரூ 1,09,020/– தொகையினை ஒப்பளிப்பு செய்ய கோரி உரிய பட்டியலை (Bill) 27.03.2023 அன்று நகராட்சிக்கு சமர்ப்பித்துள்ளார்.

மனுதாரர் அவ்வப்போது பணிகளை மேற்கொள்ளும் வேளையில் தான் செய்த பணிகளை WhatsApp–ல் நகராட்சி ஆணையருக்கு அனுப்பியதில், ஆணையரும் "நன்று" (Good) என தெரிவித்துள்ளார் என்பதை மனுதாரர் சமர்ப்பித்த ஆவணங்களின் மூலம் அறியமுடிகிறது.

மனுதாரர் நகராட்சி பணிகளை செய்து முடித்தமைக்கு ரூ 1.09 இலட்சம் தொகையினை ஒப்பளிப்பு செய்ய கோரியபோது, நகராட்சி ஆணையர் திரு.குமரிமன்னன் என்பவர் தனக்கு கையூட்டு வழங்கினால் மட்டுமே ஒப்பளிப்பு செய்யப்படும் என தெரிவித்ததைத் தொடர்ந்து, மனுதாரர் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரிடம் (RDMA) WhatsApp–ல் புகார் தெரிவித்ததைத் தொடர்ந்து, மண்டல இயக்குநர் இதுகுறித்து ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறையில் புகார் தெரிவிக்குமாறு தெரிவித்துள்ளதை மனுதாரர் சமர்ப்பித்த WhatsApp நகலின் மூலம் தெரிய வருகிறது.

இம்முறைமன்ற நடுவத்தில் விசாரணை நடைபெறும் வரையில் மனுதாரரின் புகார் குறித்த விளக்க அறிக்கை ஏதும் நகராட்சி ஆணையரால் சமர்ப்பிக்கப்படவில்லை. மாறாக ஆணையர் சமர்ப்பித்த நகராட்சி அலுவலகக் குறிப்புக் கோப்பில் 16.02.2023 அன்று பணி ஆணை வழங்கியபின் ஆணையர் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் 16.04.2023 அன்று அலுவலக குறிப்பு கோப்பில் தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டப்படி இந்நேர்வு கையாளப்பட்டுள்ளதா என்ற வினாவினை எழுப்பி, இதனை நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு தெரிவிக்குமாறு குறிப்பு எழுதியுள்ளதன் மூலம் இம்முறைமன்ற நடுவ

விசாரணையை திசை திருப்பும் வகையில் இவ்வாறு அவசர அவசரமாக எழுதப்பட்டிருக்கலாம் என்ற ஐயம் ஏற்படுகிறது.

மேலும், மனுதாரர் 17 நாட்களில் மொத்தம் 94.80 மணி நேரங்கள் பணிகள் மேற்கொண்டு, முடிக்கப்பட்ட பணிகளுக்கு 17 வெவ்வேறு நாட்களில் நகராட்சியினரால் சான்று கையொப்பம் வழங்கப்பட்டுள்ள நிலையில், முறையாக ஒப்பந்தப்புள்ளி விடப்படாதது குறித்து தெரிய வந்ததால் மனுதாரருக்கு தொகை ஒப்பளிக்கப்படவில்லை என ஆணையர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். ஆனால் மனுதாரர் அவ்வப்போது செய்த பணிகளுக்கு நகராட்சியினரால் கையொப்பமிடப்பட்ட சான்றளிக்கப்பட்டுள்ளது. முறையாக ஒப்பந்தப்புள்ளி விடப்படவில்லையெனில் சான்று கையொப்பமிட்ட நகராட்சி பணியாளர்களிடம் விளக்கம் கோரப்பட்டிருக்க வேண்டும். ஆனால் விளக்கம் ஏதும் கோரப்படவில்லை மற்றும் மனுதாரரால் மேற்கொள்ளப்பட்ட நகராட்சி பணிகளில் ஏதாவது குறைபாடுகள் உள்ளனவா அல்லது விதிகள்மீறி பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பது குறித்து நகராட்சி ஆணையாளரால் மனுதாரருக்கு எவ்வித அறிவிப்பும் வழங்கப்படவில்லை என்பதன் மூலம், கூத்தாநல்லூர் நகராட்சி ஆணையாளர் வேண்டுமென்றே பொறுப்பற்ற முறையில் தன்னிச்சையாக நடந்து கொண்டும் மனுதாரருக்கு ஒப்பளிப்பு செய்ய வேண்டிய தொகையினை உள்நோக்கத்துடன் காலந்தாழ்த்தி உள்ளதும் தெள்ளத் தெளிவாக தெரிய வருகிறது. தவிர மனுதாரரின் புகார் மனுவிற்கு ஆணையர் தனது விளக்க் அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்காத செயலானது, நகராட்சி ஆணையரின் கடமை தவறிய செயலையே, காட்டுகிறது. இவ்வாறு நகராட்சி நிர்வாகத்திற்கும், அரசுக்கும் அவப்பெயர் ஏற்படும் வகையில் பொறுப்பற்ற முறையில் நடந்து கொண்டுள்ள கூத்தாநல்லூர் நகராட்சி ஆணையாளர் மீது உரிய விதிகளின்கீழ் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பரிந்துரை செய்ய இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்த நகராட்சி ஆணையாளரால் "நன்று" (Good) என்று வழங்கப்பட்ட WhatsApp நகல், புகாரினை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறைக்கு அனுப்புமாறு தெரிவிக்கும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரின் WhatsApp நகல், நகராட்சி ஆணையாளரின் நடவடிக்கைக் குறித்து வெளியிடப்பட்ட பத்திரிக்கை செய்திகளின் நகல்கள் மற்றும் மனுதாரர் 17 பணிகளை மேற்கொண்டதற்கு, நகராட்சியனரால் கையொப்பமிடப்பட்ட சான்றின் நகல் ஆகியவை நகராட்சி நிர்வாக இயக்குநரின் கவனத்திற்காக இவ்வாணையுடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

The conduct of the Commissioner, Koothanallur Municipality is wholly unscrupulous, dishonest and motivated. His casual and cavalier deposition that the dues to the petitioner would be settled after verification of the vouchers is unacceptable. The Forum finds no reason for the unnatural and unjustified delay in settling the contractual amount to the petitioner without issuing any notice to the petitioner for lapses, if any, or omissions in his execution. It is pertinent to point out that the RDMA instead of checking up the allegation by the petitioner has simply replied that he could report to V & AC for redressal of his complaint. He has also

abdicated his responsibility as the immediate superior authority. It is all a messy muddle and maladministration of the worst kind in the Koothanallur Municipality. The DMA is directed to frame charges against the delinquent Commissioner for the proven delay, irresponsible conduct and derliction of duties. It is also ordered that interest amount accruing for the delay in the disbursement should be recovered from the Commissioner and remitted to the petitioner. A copy of the order of the Forum is being forwarded to Government in MA&WS Department for information. The allegation of the petitioner that the Commissioner demanded a bribe is not without any basis in the circumstances and materials that envelope the issue.

2023 ஆம் ஆண்டு மே திங்கள் 23–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு.கி.விஜயராகவன்,
சாய்ராம் ஸ்ரீ ஆண்டாள் டிரான்ஸ்போர்ட்,
மரக்கடை, லெட்சுமாங்குடி, கூத்தாநல்லூர் – 614 102,
திருவாரூர் மாவட்டம்.

2) ஆணையாளர், கூத்தாநல்லூர் நகராட்சி,
கூத்தாநல்லூர் – 614 101, திருவாரூர் மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28. (இணைப்புடன்)

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28. (பெயரிடப்பட்ட உறையில்)

5) அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை,
தலைமைச் செயலகம், சென்னை – 600 009.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

உதவிப்பதிவாளர்